# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 165/2024 நாள்.22.1.2026

DW1- திரு.ராஜ்குமார் த/பெ. திரு. திருமேனி

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

வாதி எனது சகோதரர் என்றால் ஆமாம். என் அப்பா உயிருடன் இருக்கும்போதே வாரிசுகள் எல்லோருக்கும் செட்டில்மெண்ட் மூலம் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் ஆமாம். அந்த சொத்துகள் அவரவர்கள் அனுபவத்தில் உள்ளது என்றால் ஆமாம்.

5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

என் அப்பா எங்களுக்கு பிரித்து கொடுத்தது போக அவருக்காக வைத்திருந்ததை என் மகனுக்கு எழுதிகொடுத்தார் என்றால் ஆமாம். என் அப்பா பிரித்து கொடுத்த சொத்திகளில் அவரவர் அனுபவம் செய்கிறார் என்றால் ஆமாம்.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என் தாத்தா பெயர் என்ன என்றால் வீரய்யன். பாட்டி பெயர் என்ன என்றால் தனபாக்கியத்தம்மாள். தனபாக்கியத்தம்மாள் கிரையம் வாங்கிய சொத்து அவர் வாங்கியதா என்றால் இல்லை அப்பா கிரையம் வாங்கியது. தற்போது என்னிடம் காண்பிக்கபடுவதுதான் அந்த கிரைய பத்திரம் வா.சா.ஆ.1 என்றால் ஆமாம். வா.,சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் என் பாட்டி பணம் கொடுத்து வாங்கியதாக உள்ளது என்றால் ஆமாம். என் அப்பாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு ஆண்கள், இரண்டு பெண்கள். வாதியும, நானும் ஆண்பிள்ளைகள் என்றும், 2, 3 பிரதிவாதிகள் சகோதரிகள், 4ஆம் பிரதிவாதி என் தாயார் என்றும், 5ஆம் பிரதிவாதி என் மகன் என்றும், 6ஆம் பிரதிவாதி என் மனைவி என்றும் சொன்னால் ஆமாம். என் தாயார் எங்கு உள்ளார் என்றால் என்னுடன் வசிக்கிறார். என் தாயார் பூர்விகவீட்டில் தரைதளத்தில் வசிக்கிறார் நான்தான் பார்த்துகொள்கிறேன். அந்த வீட்டில் மேல்தளத்தில் வாதி வசிக்கிறார் என்றால் ஆமாம். எனக்கும், என் சகோதரிகளுக்கும் வாதிக்கும் செட்டில்மெண்ட் மூலம் பாகம் பிரித்து கொடுத்தார்கள் என்றால் ஆமாம்.வாதி ரவிசந்திரனுக்கும் செட்டில்மெண்ட் மூலம் முதலில் 19 பிளாட்டும், பின்பு 2பிளாட்டும் செட்டில்மெண்ட் கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். எனக்கு 26 பிளாட் என்றால் ஆமாம் சதுரஅடி

இருவருக்கும் ஒன்றுதான். என் சகோதரிகளுக்கு ஒவ்வொருவருக்கும் ஐந்து ஐந்து பிளாட் கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். மேற்படி 4 செட்டில்மெண்ட் பத்திரத்திலும் என் தகப்பனார் அவரது தாயார் வாங்கி வாரிசு அடிப்படையில் என் அப்பாவுக்கு வந்ததாக சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். என் தகப்பனார் எப்போது வேலைக்கு போனார் என்றால் தெரியவில்லை. என் அப்பா எப்போது ஒய்வு பெற்றார் என்றால் 1990. 1990 இல் ஒய்வு பெற்றாரா என்றால் விருப்ப ஒய்வு எடுத்து கொண்டார். என் தாயார் பெயரில் இருந்தசொத்தை என் அப்பா முதலில் என்ன பெயரில் பிளாட் போட்டார் என்றால் தனபாக்கியத்தம்மாள் நகர். அதில் எத்தனை பிளாட் என்றால் 19. 19பிளாட்டையும் தனிதனியாக விற்றாரா என்றால் இல்லை மொத்தமாக கொடுத்துவிட்டார். யாரிடம் கொடுத்தார் என்றால் காளையார். எவ்வளவுக்கு விற்றார் என்றால் சரியாக ஞாபகமில்லை. என் சகோதரி மலர்விழிக்கு எப்போது திருமணம் என்றால் 1998. என் அப்பா ஒய்வு பெற்று 8 வருடம் கழித்து திருமணம் என்றால் ஆமாம். காளையாரிடம் விற்ற பணத்தை வைத்துதான் என் சகோதரிக்கு திருமணம் செய்தார் இல்லை அவர் பணம் வைத்திருந்தார். என் அப்பா காளையாரிடம் விற்ற பிறகு ஞானம் நகரில் இரண்டு பிளாட் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது. காளையாரிடம் விற்ற பணத்தை கொண்டு சகோதரிக்கு திருமணம் செய்தார் என்றும் மேற்படி இரண்டு பிளாட் வாங்கினார் என்றால் சரியல்ல. வாதி ரவிசந்திரன் என்ன படித்திருக்கிறார் என்றால் டிப்ளோமோ மெக்கானிக்கல் இன்ஜினியரிங். அவர் 10 வருடம் ஈரோடுக்கு போனதாக சொன்னேனே என்ன காரணம் என்றால் கல்யாணம் செய்து கொண்டு போனார். மாதத்திற்கு நான்கு முறை தஞ்சாவூருக்கு வந்துபோனார் என்றால் இல்லை வாதிக்கு என் அப்பா திருமணம் செய்து வைத்தார் என்றால் இல்லை அவரே செய்து கொண்டார். அவருக்கு எங்கு கல்யாணம் நடந்தது என்றால் தெரியாது. எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் எங்கு உள்ளது என்றால் வங்கியில் உள்ளது. நான் தாக்கல் செய்த மனுவில் அசல் ஆவணங்கள் வங்கியில் உள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. எந்த வங்கியில் உள்ளது என்றால் கேவிபி வங்கியில் உள்ளது. என் மனைவிக்கு என் மகன் எழுதி வைத்த செட்டில்மெண்ட் அசல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை நகல் தான் தாக்கல் செய்துள்ளேன். என் பாட்டிக்கு என் அப்பா மட்டும் வாரிசு என்றால் ஆமாம். தாவா சொத்துக்கள் எல்லாம் என்

அப்பாவுக்கு அவருடைய தாயாரிடமிருந்து வந்தது என்றால் அவரே வாங்கியது. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் வா.சா.ஆ.10 ஆவணம் என் மகன் என் மனைவிக்கு எழுதிவைத்தது என்றால் ஆமாம் அதன் அசல் என்னிடம் உள்ளது என்றால் ஆமாம். அசல் தாக்கல் செய்யாததற்கு காரணம் என்ன என்றால் அசல் கொடுக்கலாம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணம்தான் என் அப்பா என் மகனுக்கு எழுதி வைத்த உயில் பத்திர நகல் என்றால் ஆமாம் அது வா.சா.ஆ.12 என்றால் ஆமாம் அதன் அசல் என்னிடம் உள்ளது என்றால் ஆமாம். அசல் தாக்கல் செய்யலாம். உயில் எங்கு எப்போது டைப் அடிக்கபட்டது யார் தகவல் சொன்னார் என்றால் தெரியாது. உயில் தயாரான போது அப்பா என்னுடன் இருந்தார் என்றால் ஆமாம். அது என்ன தேதி என்றால் 8.2.2019. எழுதி வைத்த காலத்தில் என் அப்பாவுக்கு வயது 95 இருக்கும் என்றால் சரியல்ல இறந்தபோது அப்பாவுக்கு 81. அதில் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் தெரியாது. உயில் நான் படித்து பார்த்திருக்கேனா என்றால் பார்த்துள்ளேன். உயில் எழுதி வைத்தது எனக்கு எப்போது தெரியும் என்றால் அப்பா இறந்தபிறகு தெரியும். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் புகைப்படம் அப்பாவுடையது அது வா.சா.ஆ.12 உள்ளது என்றால் ஆமாம். அப்பா வயது அந்த போட்டோவிலிருந்து 90 என்றால் சரியல்ல. என் அப்பா மேற்படி ஆவணம் எழுதி வைப்பதற்கு முன்பு 2 ஆண்டுகளாக படுக்கையில் இருந்தார் என்றால் இல்லை. என் அப்பாவுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே பக்கவாதம் வந்தது என்றால் இல்லை மருத்துவரிடம் காண்பித்தாரா என்றால் சளிக்கு மட்டும் காண்பிப்பார். எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ளது என்றால் தெரியாது. உயில் எழுத அப்பாவுக்கு துணையாக இருந்தது யார் என்றால் தெரியாது. என் அப்பாவுக்கு எத்தனை பேரக்குழந்தைகள் என்றால் நால்வருக்கும் தனிதனியாக இரண்டு இரண்டு குழந்தைகள். வா.சா.ஆ.12 இல் உள்ள 5 பிளாட்டுகளும் எங்களுக்கெல்லாம் எழுதி கொடுத்தது போக அவருக்காக அவர் வைத்து கொண்டது என்றால் ஆமாம். இதில் அப்பா வாங்கிய சொத்து உள்ளதா என்றால் எல்லாமே அப்பா வாங்கியதுதான். என் அப்பா அவர் பெயரில் தனிபட்ட முறையில் சொத்து வாங்கவில்லை என்றால் ஆமாம். உயிலில் தனபாக்கியத்தம்மாளுக்கு சொத்து எப்படி கிடைத்து என்று அப்பா சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. தாவா சொத்து திருமேனி நகர்

விரிவாக்கத்தில் உள்ளது என்றால் ஆமாம். 5 பிளாட்டுகளும் மொத்தமாக 25000 சதுரஅடி என்றால் சரியல்ல. ஒரு சதுரஅடி விலை 2000க்குமேல் போகும் என்றால் இல்லை. நான் நாகபட்டினம் ரோடு வாண்டையார் ஐடிஐக்கு எதிர்புறம் வசிக்கிறேன் என்றால் சரியல்ல தளவாய்பாலம் ரோட்டில் வசிக்கிறேன். நான் வசிக்கும் இடம் செட்டில்மெண்ட் மூலம் கிடைத்தது என்றால் ஆமாம். 4 பேருக்கும் எழுதி வைத்த செட்டில்மெண்ட்டை நான் ஒத்துகொள்கிறேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.12 எனது தகப்பனாரால் அவருடைய சுய யோசனையில் விருப்பத்தில் அவர் எழுதிகொடுக்கவில்லை என்றும் நாங்கள் தயார் செய்து கையெழுத்து பெற்று பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 உயில் ஆவணம் செல்லாது என்பதால் என் மகன் என் மனைவிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் செல்லாது என்றால் சரியல்ல. என் பாட்டிக்கு இந்த சொத்து தவிர வேறு சொத்து உள்ளதா என்றால் பூர்விக வீடு உள்ளது. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் 1970, 1972 இல் ஏற்பட்ட கிரைய பத்திரம் என் பாட்டி தனபாக்கியத்தம்மாள் பெயரில் ஏற்பட்டது என்றால் எல்லாம் என் தகப்பனார் வாங்கியது. என் அப்பா வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்ட பரிகாரம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.தாவா சொத்தில் வாதிக்கு 1/5 பாகம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.01.23 10:40:32 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.